1973 நவம்பர் 27]

பி கிரேட், 100-க்கு 50-வது இருந்தால்தான் அவர்கள் இன்டர்வியூவுக்கு, பேட்டிக்கு அழைக்கப்படுவார்கள் என்று மாற்றப்பட்டது. ஆனால், அப்படி வைத்தும் 850 பேர் வந்திருக்கிறார்கள் 120 இடங்களுக்கு. அவ்வளவு பேரையும் அழைத்து, மாணவர்களுடைய நேரத்தையும், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவினுடைய நேரத்தையும் வீணாக்க வேண்டாமென்று கருதுகிறேன்.

கிழாய் ஊராட்சியில் கால்நடை மருத்துவ மனைக் கட்டடம்

*438 **திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் கிழாய் பஞ்சாயத்துப் பகுதியில் கால்நடை மருத்துவமனை கட்டும் பணி எப்போது துவங்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1971-ம் ஆண்டு சனவரி மாதம் தொடங்கப்பட்டது.

ஒன்றியப் பள்ளிகளில் சுகாதார வசதிகள்

*439 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் சுகாதார வசதி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஊராட்சி ஒன்றிய பொது நிதியில், மூன்று இலட்ச ரூபாய்களுக்கு மேல் உபரி நிதி இருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றின் பொது நிதியிலிருந்து பள்ளிகளில் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பரிசீலனை எப்பொழுது முடியும்? ஆரம்பத்தில் எத்தனை பள்ளிகளுக்கு இந்த வசதி வாய்ப்பளிக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று அறியலாமா ?